09.10..2025.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்

அமர்வு வழக்கு எண்.142/2025

அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுரேஷ் | | |
| த/பெ | சுப்பரமணி | | |
| கிராமம் | வெங்கந்தூர் | தொழில் | தனியார் கல்லூரி துணை பேராசிரியர் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 40/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 09.10.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் மாவட்டம் கப்பியாம்புலியூரில் உள்ள சிகா கலைக்கல்லூரியில் உதவி பேராசிரியராக பணி செய்து வருகிறேன். அ.சா.1 சித்ரா எனது மனைவியாவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 29/07/2023 அன்று என் கொல்லையில் களை வெட்டும் வேலை நடந்து கொண்டிருந்தது. அதைப் பார்க்க நான் காலை 7:00 மணிக்கு அங்கு சென்றேன். அப்படி செல்லும்போது அய்யனார், செந்தில், பொன்னுசாமி ஆகிய மூன்று பேர் நான் செல்லும்போது என்னுடைய கொல்லையில் என்னை வழிமறித்து, என் சட்டையை

பிடித்துக் கொண்டு மூவரும் என்னை தாக்க தொடங்கினார்கள். கொல்லையில் பொன்னுசாமி என்பவர் கத்தி எடுத்து வந்து என்னை தாக்க வந்தார். நான் தப்பித்துக் கொண்டு அங்கிருந்து ஓடி வந்து விட்டேன். நான் ஓடிவந்த போது அதனூர் பேருந்து நிலையத்திற்கு தப்பித்து ஓடி வந்து விட்டேன். அங்கு நான் நின்று கொண்டிருந்தேன். அங்கு எதிரிகள் என்னை பின் தொடர்ந்து வந்து கட்டையாலும், கற்களாலும் தாக்க தொடங்கினார்கள். என்னை தாக்கியதால் நான் மயக்கம் வந்து கீழே விழுந்து விட்டேன். சுந்தரமூர்த்தி என்பவர் என்னை தாக்கிய போது கட்டையை பிடுங்கினார். என்னை தாக்கிய போது, இந்திரஜித் என்பவரும் சுந்தரமூர்த்தியுடன் இருந்து என்னை தாக்கிய தடியை பிடுங்கினார். அந்த சமயத்தில் அவர்களுடன் ராமச்சந்திரனும் இருந்தார். அந்த சமயத்தில் மற்ற சிலரும் அங்கு இருந்தார்கள் அவர்களது பெயர்கள் எனக்கு ஞாபகம் இல்லை. அதன் பிறகு எனக்கு கையில் கொடுங்காயம் ஏற்பட்டுவிட்டது. இடது கையில் எலும்பு முறிவும் ஏற்பட்டது. இடது கால் முட்டி, தொடை ஆகிய அனைத்து இடங்களிலும் காயம் ஏற்பட்டது. அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் தான் என்னை மீட்டு 108 ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பினார்கள். அதனூரை சேர்ந்த சாட்சி சரவணன் என்பவர் எனக்கு முதலுதவி சிகிச்சை செய்தார். நான் மருத்துவமனையில் இருந்தபோது, சுயநினைவு இல்லாமல் இருந்தேன். அப்போது கெடார் காவல்நிலையத்தை சேர்ந்த உதவி ஆய்வாளர் விவேகானந்தர் என்பவர் வந்து, என்னையும், என் மனைவியும் விசாரணை செய்தார். எனக்கு சுயநினைவு இல்லாததால் எனது மனைவியை விசாரணை செய்து, எனது மனைவியிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அங்கிருந்த சிசிடிவி புட்டேஜையும், பத்மா நகைக்கடை, கனரா வங்கி ஆகியவற்றில் இருந்த சிசிடிவி புட்டேஜையும் காவல்துறையினர் கைப்பற்றினார்கள். எதிரிகள் என்னை தாக்கிய ஆயுதத்தை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்னிடம் காட்டப்படும் மரத்தடி என்னை தாக்க பயன்படுத்தியதுதான். (சாட்சி சரியாக

அடையாளம் காண்பித்தார்) அந்த மரத்தடி சா.பொ.1 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

என்னை மருத்துவமனையில் காவல்துறையினர் விசாரணை செய்தபோது நேரம் என்ன இருக்கும் என்றால், 9.00 முதல் 10.00 மணி இருக்கும். போலீசார் என்னை விசாரணை செய்தபோது சம்பவம் தொடர்பாக என்னிடம் வாக்குமூலம் ஏதாவது வாங்கினார்களா? என்றால், எனக்கு அது குறித்து ஞாபகம் இல்லை. அதன் பிறகாவது தற்போது வரையில் என்னை விசாரணை செய்தார்களா என்றால் என்னை விசாரிக்கவில்லை. நான் ஒரு மாதம் மருத்துவமனையில் இருந்ததால் எனது மனைவியைத் தான் விசாரணை செய்தார்கள். என்னை மருத்துவமனையில் யார் கொண்டு சென்று சேர்த்தார்கள் என்றால், அங்கிருந்த பொதுமக்கள் என்னை ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பினார்கள். அதன் பிறகாவது நான் என்னை மருத்துவமனையில் யார் கொண்டு போய் சேர்த்தது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால், எனது அப்பா மருத்துவமனைக்கு கூடவே வந்துள்ளார். எனது மனைவி அன்று எத்தனை மணிக்கு என்னை பார்த்தார்கள் என்றால், சுமார் 9.00 மணிக்குள் வந்துவிட்டார். 9.00 மணிக்கு அவர் வந்த பிறகு நான் சுயநினைவுடன் இருந்தேனா? அல்லது சுயநினைவு இல்லாமல் இருந்தேனா? என்றால், சுயநினைவு இல்லாத நிலையில்தான் இருந்தேன். நான் மயக்கத்தில் இருந்ததால் இந்த சம்பவம் எப்படி நடந்தது என்ற விவரம் எனது மனைவிக்கு தெரியாது என்றால், அவருக்கு நடந்த சம்பவத்தை குறித்து சிறிது தெரியும். அந்த சமயத்தில் நடந்த சம்பவத்தை குறித்து எனது மனைவிக்கு நான் சொல்லவில்லை. அங்கிருந்த பொதுமக்கள் சொல்லியுள்ளார்கள். மருத்துவமனையில் எனக்கு எத்தனை மணிக்கு சுயநினைவு வந்தது என்றால், சுமார் 4 மணிக்கு சுயநினைவு வந்தது. 4 மணிக்கு

சுயநினைவு வந்த பிறகு, மருத்துவர் என்னிடம் என்ன நடந்தது, ஏது நடந்தது? என்று கேட்டார்களா? என்றால் கேட்டார்கள். அப்போது மருத்துவரிடம் என்னை 3 பேர் அடித்ததாக சொன்னேன். எனது நிலத்தில் அடித்ததாக சொன்னேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சாட்சிய விவரங்களானது, காவல்துறை விசாரணையில் சொல்லாமல், எனது மனைவியின் புகார் வாக்குமூலத்தில் சொல்லாமல், தற்போது தான் முதன்முறையாக நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால், சரிதான். சம்பவம் நடந்த பின்னிட்டு இன்று தான் இந்த விவரங்களை புதிதாக சொல்கிறேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் 4 பேர் இருந்தார்கள் என்றும், அவர்கள் கட்டையை பிடுங்கினார்கள் என்றும், இன்று தான் புதிதாக சொல்கிறேன் என்றால், சரிதான். காவல்துறையினர் சிசிடிவி ஃபுட்டேஜ் வைத்து தான் வழக்கை பதிவு செய்துள்ளார்கள். சிசிடிவி ஃபுட்டேஜ் வைத்து தான் வழக்கை பதிவு செய்தார்கள் என்ற விவரத்தை எனக்கு பொதுமக்கள் சொன்னார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் இந்த தடியை இன்று தான் நான் முதன்முதலாக அடையாளம் காண்பிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் எதற்காக அந்த மூன்று பேரும் என்னை அடிக்க வந்தார்கள் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால், சரிதான். நிலப் பிரச்சனை சம்பந்தமாக அடித்தார்கள். எனக்கு கை கால் முறிந்து விட்டது என்பது சம்பந்தமாக விபத்து பதிவேடு எதையும், நான் காவல் நிலையத்தில் கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல கொடுத்தார்கள். எதிரிகள் யாரும் என்னை அடிக்கவில்லை என்றும், நான் சொல்வது போல எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், சொன்னால் சரியல்ல. நான் மருத்துவமனை செல்லும்போது நல்ல சுயநினைவில் தான் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனையில் நான் மருத்துவரிடம் சொல்லும்போது அடையாளம் தெரியாத சில நபர்கள் என்னை தாக்கி விட்டதாகத்தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல நான் அடையாளம் தெரிந்த நபர்கள் என்னை

அடித்ததாகத்தான் சொல்லியுள்ளேன். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>